**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி - 2013**

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிசாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் வங்கியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப்

பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக் கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படி (எஸ்எல்எவ்ஆர்எஸ் மற்றும் எல்கேஏஎஸ்) நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், பொதுப் பேரேட்டுக் கணக்குகள் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளை வெளிப்படுத்தும் விதத்தில் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணனிமயப்படுத்தப்பட்ட மனித வளங்கள் மற்றும் கொடுப்பனவு அலகு என்பன 2012 இலிருந்து ஸ்தாபிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் கடந்த இரண்டு ஆண்டுகளாக இது சொத்துக்களாகப் பதியப்பட்டு பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகவே சொத்துக்கள் மற்றும் பெறுமானத்தேய்வு முறையே ரூபா 1,368,736 மற்றும் ரூபா 324,184 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், மென்பொருள் அபிவிருத்தியாளருக்கு செலுத்த வேண்டிய ரூபா 684,368 தொகை கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது.

(இ) 2001 இல் 9 சதவீதத்தில் அரசாங்கத்திடமிருந்து ரூபா 250,000,000 தொகையான கடனொன்று பெறப்பட்டிருந்த போதிலும், 2013 திசெம்பர் 31 வரை திறைசேரிக்கு முதலோ அல்லது வட்டியோ மீள்கொடுப்பனவு திருப்பிச் செலுத்தல் செய்யப்பட்டிருக்கவில்லை. ரூபா 134,321,918 கூட்டுமொத்தத் தொகையான வட்டி 2006 வரை வழங்கப்பட்டிருந்த போதிலும் 2006 முதல் 2013 வரையான காலத்திற்காக ரூபா 157,500,000 கூட்டுமொத்தத் தொகைக்கு கணக்குகளில் எவ்வித ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்ககள்

பின்வரும் இணக்கம் செய்யப்படாத மீதிகள் அவதானிக்கப்பட்டன..

(அ) நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நன்முறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்ட முறையே ரூபா 8,561,853 மற்றும் ரூபா 2,286,235 தொகையான இணக்கம் செய்யப்படாத மீதிகள் 2004 இலிருந்து இணக்கம் செய்யப்படாமல் இருந்தது.

(ஆ) ரூபா 1,122,255 தொகையான இணக்கம் செய்யப்படாத மீதியொன்று இனங்காணப்படாமல் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பஹா கிளையின் 004/1/09/1607 ஆம் இலக்க இணக்கம் செய்யப்படாத காசோலைக் கணக்கில் இருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்டாத வேறுபாடுகள்

பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்புக்கள் மற்றும் சேமிப்புக் கணக்குகள் தொடர்பாக 11 கிளைகள் தொடர்பில் நிதிக் கூற்றில் காட்டப்பட்ட தொகைக்கும் கணனிமயப்படுத்தப்பட்ட முறைமை மூலம் உருவாக்கப்பட்ட மீதிகளிற்கும் இடையில் ரூபா 31,217,166 ஆன வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முறையற்ற கணக்குகள் தொடர்பாக ரூபா 150,378,908 கூட்டுத்தொகையான நிதிக்கூற்றில் காட்டப்பட்ட தொகைக்கும் ரூபா 160,602,177 கூட்டுத்தொகையான கணனிமயப்படுத்தப்பட்ட முறைமை மூலம் உருவாக்கப்பட்ட மீதிகளிற்கும் இடையில் ரூபா 10,212,121 ஆன வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(இ) சொத்துக்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு தொடர்பில் பேரேட்டு மீதிகளுக்கும் நிலையான சொத்துப் பதிவேட்டு மீதிகளிற்கும் இடையில் முறையே ரூபா 6,369,435 மற்றும் ரூபா 7,384,579 ஆன வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 2.2.4. இனங்காணப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,661,384 கூட்டுமொத்தத் தொகையான வைப்புக்கள் இனங்காணப்படாத வைப்புக்களாகக் காணப்பட்டன.

(ஆ) முற்பணக் கணக்கில் காட்டப்பட்ட ரூபா 7,885,230 கூட்டுத்தொகையான மீதிகளில், ரூபா 5,394,098 அல்லது 68 சதவீதம் இனங்காணப்பட்டு கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5. பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அதவானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மூன்றாம் தரப்பினரால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உறுதிப்படுத்தல்கள் மிகவும் நலிவான மட்டத்தில் காணப்பட்டன. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| விபரங்கள் | கணக்குகளின் படி | | உறுதிப்படுத்தப்பட்டது | | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | கணக்குகளின் எண்ணிக்கை | தொகை ரூபா | கணக்குகளின் எண்ணிக்கை | தொகை ரூபா | % |
| வங்கிக் கணக்குகள் | 29 | 86,819,683 | 05 | 10,218,367 | 11.76 |
| கடன்பெறல் | 04 | 570,971,037 | 03 | 320,136,246 | 56.06 |
| நிறுவன ரீதியான நிலையான வைப்புக்கள் | 15 | 4,721,679,168 | 06 | 2,774,052,405 | 58.75 |
| விசேட கடன் திட்ட வைப்புக்கள் | 26 | 908,343,043 | 01 | 226,296,552 | 24.91 |

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிக்கும் மூன்றாம் தரப்பினரால் உறுதிப்படுத்தப்பட்ட மீதிக்கும் இடையில் பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| விபரம் | கணக்குகளின் படி ரூபா | உறுதிப்படுத்தலின் படி ரூபா | வேறுபாடுகள் ரூபா |
|---|---|---|---|
| USAID கடன் | 868,344 | 33,553 | 834,791 |
| இலங்கை துறைமுககள் அதிகாரசபை | 230,431,525 | 226,296,552 | 4,134,972 |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான வங்கியின் செயற்பாடுகளை நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முந்திய தேறிய இலாபமான ரூபா 430.26 மில்லியனுடன் ஒப்பிடுகையில் வரிக்கு முந்திய தேறிய இலாபமான ரூபா 342.7 மில்லியனை விளைவித்திருந்தமையால், நிதி விளைவுகளில் ரூபா 87.56 மில்லியனை குறைவாகக் காட்டியது.

மேலும், மீளாய்வாண்டிற்கான மொத்த திரட்டிய வருமானத்தை முன்னைய ஆண்டின் நேரொத்த மொத்த திரட்டிய வருமானமான ரூபா 270.78 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 234.04 மில்லியனாக இருந்தமையால் ரூபா 36.74 மில்லியன் குறைவைக் காட்டியது.

இந்த வீழ்ச்சிக்கு பங்களிப்புச் செய்த காரணங்கள் பின்வருமாறு கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| விடயம் | தற்போதைய ஆண்டு 2013 | முன்னைய ஆண்டு 2012 | முன்னைய ஆண்டிலும் பார்க்க மாற்றத்தின் சதவீதம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| வட்டி வருமானம் | 3,635,238,691 | 2,879,160,502 | 26 |
| வட்டிச் செலவினம் | 2,459,200,065 | 1,725,196,745 | 43 |
| தேறிய வட்டி வருமானம் | 1,176,038,626 | 1,153,963,757 | 2 |
| கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம் | 97,250,758 | 72,580,010 | 34 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 4,918,546 | 6,615,513 | (26) |
| மொத்தச் செயற்பாட்டு இலாபம் | 1,278,207,930 | 1,233,159,280 | 4 |
| சேத இழப்பீடுகள் மற்றும் நட்டங்கள் | (53,338,578) | 116,716 | (45799) |
| தேறிய செயற்பாட்டு வருமானம் | 1,224,869,352 | 1,233,275,997 | (1) |
| ஆளணிச் செலவினம் | (468,873,067) | (463,579,654) | 1 |
| ஏனைய செலவினம் | (312,444,366) | (247,257,319) | 26 |
| வற் வரிக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் | 443,551,919 | 522,439,024 | (15) |
| பெறுமதி சேர் வரி (வற்) | (100,810,623) | (92,174,295) | 9 |
| வரிக்கு முன்னரான இலாபம் | 342,741,296 | 430,264,729 | (20) |
| வரி | (110,479,788) | (157,802,290) | (30) |
| ஆண்டிற்கான இலாபம் | 232,261,508 | 272,462,439 | (15) |
| நிதிச் சொத்துக்களின் விற்பனைக்காக கிடைத்த மீள் அளவீட்டு நட்டங்கள் | 1,780,000 | (1,680,000) | (206) |
| ஆண்டிற்கான மொத்த திரட்டிய வருமானம் | 234,041,508 | 270,782,439 | (15) |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டிற்கான நேரொத்த தொகைகளுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்காக வட்டிச் வருமானம் 26 சதவீதத்திற்கு எதிராக 43 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஏனைய வருமானம் ரூபா 1.697 மில்லியன் அல்லது 26 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது விற்பனைக்காக கிடைத்த நிதிச் சொத்துக்களின் மீள் அளவீட்டு நட்டங்கள் ரூபா 3,460 மில்லியன் அல்லது 206 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது சேத இழப்பீடுகள் ரூபா 53 மில்லியனால் அதிகரித்திருந்தது.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, மீளாய்வாண்டிற்கும் முன்னைய 5 ஆண்டு காலப்பகுதிக்குமான வங்கியின் செயற்பாட்டு விளைவுகள் கீழே உள்ளன.

| | | 2013<br>ரூபா மில் | 2012<br>ரூபா மில் | 2011<br>ரூபா மில் | 2010<br>ரூபா மில் | 2009<br>ரூபா மில் | 2008<br>ரூபா மில் |
|---|---|---|---|---|---|---|---|
| (i) | வட்டி வருமானம் | 3,635 | 2,879 | 2,611 | 2,362 | 2,165 | 1,956 |
| (ii) | வட்டிச் செலவினம் | 2,459 | 1,725 | 1,214 | 1,368 | 1,939 | 1,636 |
| (iii) | தேறிய வட்டி வருமானம் | 1,176 | 1,153 | 1,397 | 994 | 226 | 320 |
| (iv) | ஏனைய செயற்பாட்டு வருமானம் | 97 | 73 | 76 | 387 | 505 | 261 |
| (v) | ஏனைய வருமானம் | 48 | 7 | -- | 1 | 2 | 5 |
| (vi) | மொத்த வருமானம் | 1,225 | 1,233 | 1,473 | 1,382 | 733 | 586 |
| (vii) | மொத்த மீண்டெழும் செலவினம் | 882 | 803 | 785 | 743 | 613 | 535 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (viii) | வரிக்கு முன்னரான தேறிய இலாபம் | 343 | 430 | 688 | 639 | 120 | 51 |
| (ix) | வரி | 110 | 158 | 178 | 179 | 46 | 30 |
| (x) | வரிக்குப் பின்னரான தேறிய இலாபம் | 232 | 272 | 510 | 460 | 74 | 21 |
| (xi) | விற்பனைக்காக உள்ள சொத்துக்களால் கிடைத்த நட்டங்கள் | 2 | 2 | 3 | - | - | - |
| | மொத்த திரட்டிய வருமானம் | **234** | **270** | **507** | **-** | **-** | **-** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

❖ 2008 - 2013 ஆம் ஆண்டு காலத்தின் போது ரூபா 1,956 மில்லியனிலிருந்து ரூபா 3,635 மில்லியன் வரை அல்லது 86 சதவீதம் வட்டி வருமானம் அதிகரித்திருந்ததுடன் 2008 - 2009 ஆம் ஆண்டு வரையான காலத்தின் போது வட்டிச் செலவினம் ரூபா 1,636 மில்லியனிலிருந்து ரூபா 1,939 மில்லியன் வரை அதிகரித்திருந்ததுடன் 2011 இல் ரூபா 1,214 மில்லியனிற்கு குறைவடைந்திருந்தது. மேலும் 2011 முதல் 2013 வரையான காலத்தின் போது வட்டிச் செலவினம் ரூபா 1,214 மில்லியனிலிருந்து ரூபா 2,459 மில்லியன் வரை அல்லது 103 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

❖ 2008 – 2011 காலத்தின் போது ரூபா 51 மில்லியனிலிருந்து ரூபா 688 மில்லின் வரை அல்லது 1,249 சதவீதத்தால் வரிக்கு முந்திய தேறிய இலாபம் அதிகரித்திருந்தது அதன் பின்னர் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது ரூபா 430 மில்லியனிலிருந்து ரூபா 343 மில்லினாக அல்லது 20 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

❖ 2008 – 2011 காலத்தின் போது ரூபா 21 மில்லியனிலிருந்து ரூபா 510 மில்லின் வரை அல்லது 2,328 சதவீதத்தால் வரிக்கு பிந்திய தேறிய இலாபம் அதிகரித்திருந்தது அதன் பின்னர் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது ரூபா 272 மில்லியனிலிருந்து ரூபா 232 மில்லினாக அல்லது 15 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

**(ஆ) விகிதங்களும் சதவீதங்களும்**

கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 6 ஆண்டுகளின் போதான வங்கியின் முக்கியமான சில விகிதங்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 |
|---|---|---|---|---|---|---|---|
| | % | % | % | % | % | % | % |
| <u>இலாபத்தன்மை விகிதங்கள்</u> | | | | | | | |
| i. தேறிய வட்டி எல்லை | 4.76 | 5.63 | 7.5 | 7.58 | 4.41 | 4.16 | 4.85 |
| ii உரிமை மூலதனத்தில் வருவாய் | 5.95 | 7.43 | 18.15 | 17 | 3.48 | 1.76 | 3.3 |
| iii சராசரிச் சொத்துக்களில் வருவாய் | 0.95 | 2.04 | 3.76 | 3.46 | 0.8 | 0.38 | 1.1 |
| <u>போதிய மூலதன விகிதங்கள்</u> | | | | | | | |
| i உரிமை மூலதனம் / மொத்தச் சொத்துக்கள் | 14.65 | 17.06 | 14.6 | 14.6 | 13.41 | 16.01 | 19.9 |
| ii உரிமை மூலதனம் / கடன்கள் | 17.74 | 20.66 | 19.46 | 19 | 18 | 19 | 23 |
| iii தட்டு I | 22.49 | 26.68 | 29.59 | 26.2 | 25.29 | 27.81 | 56.95 |
| iv தட்டு II | 22.85 | 26.99 | 29.92 | 26.9 | 25.29 | 28.47 | 57.98 |
| <u>திரவ விகிதங்கள்</u> | | | | | | | |
| i. திரவச் சொத்துக்கள் / வைப்புக்கள் (பொறுப்புக்கள்) | 24.38 | 21.98 | 20.04 | 21 | 26 | 12 | 10 |
| ii வைப்புக்கள்/ கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 100.07 | 93.22 | 87.48 | 85 | 85 | 71 | 61 |
| iii கடன்பெறல்/ கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 4.48 | 3.98 | 3.44 | 4 | 5 | 5 | 10 |

வங்கியானது மத்திய வங்கியால் குறிப்பிடப்பட்டவாறு 5 சதவீதம் மற்றும் 10 சதவீதம் தட்டு I மற்றும் தட்டு II இல் போதிய மூலதன விகதித்தின் ஆகக் குறைந்த எல்லையை பேணுவதில் நல்ல முன்னேற்றம் உள்ள போதிலும் இரண்டு விகிதங்களும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு குறைவடைந்திருந்ததுடன் கடந்த ஆறு ஆண்டுகளிற்காக குறைந்த விகிதங்களை பதிவுசெய்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 கடன் நிர்வாகம்

#### 4.1.1 செயற்பாடற்ற கடன்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவையாகவிருந்த கடன் மற்றும் அவற்றில் செயற்பாடற்ற கடன்கள் என்பவற்றின் நிலையை பின்வரும் கூற்று காட்டுகிறது.

| **கடன் வகை** | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவுள்ள கடன் மீதி** | **செயற்பாடற்ற கடன் மீதி** | **செயற்பாடற்ற கடன்களின் சதவீதம்** |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| ஈட்டுக் கடன்கள் | 7,863 | 998 | 12.69 |
| ஊழியர் சேமலாப நிதியக் கடன்கள் | 8,592 | 4,945 | 57.4 |
| தோட்டத்துறை ஊழியர் சேமலாப நிதியக் கடன்கள் | 1,165 | 862 | 73.9 |
| தனிப்பட்ட கடன்கள் | 1,227 | 231 | 18.83 |
| மோட்டார் வாகனக் கடன்கள் | 65.4 | 2.8 | 4.28 |
| **மொத்தம்** | **18,912** | **7,038.80** | **37.22** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) ஈட்டுக் கடன்கள், ஊசேநி கடன்கள், தோட்டத்துறை ஊசேநி கடன்கள், தனிப்பட்ட மற்றும் மோட்டார் வாகனக் கடன்கள் தொடர்பான செயற்பாடற்ற கடன்களின் (என்பிஎல்) வீதங்கள் முறையே 12.69 சதவீதம், 57.4 சதவீதம், 73.9 சதவீதம், 18.83 சதவீதம் மற்றும் 4.27 சதவீதமாக இருந்தன. முன்னைய ஆண்டிற்கான ஈட்டுக் கடன்கள், ஊசேநி கடன்கள், தோட்டத்துறை ஊசேநி கடன்கள், தனிப்பட்ட மற்றும் மோட்டார் வாகனக் கடன்கள் தொடர்பான் செயற்பாடற்ற கடன்களின் வீதங்கள் முறையே 9.11 சதவீதம், 62.32 சதவீதம், 71.37 சதவீதம் மற்றும் 10.4 சதவீதமாக உள்ளன. ஆதலால், ஊசேநி கடன்கள் தவிர்ந்தவற்றில் அதிகரிக்கும் போக்கை சுட்டிக் காட்டியது.

ஆ) மேற்குறிப்பிட்ட தரவுகளின் படி, ஈட்டு மற்றும் தோட்டத்துறை ஊசேநி கடன்கள் தொடர்பான அறவீட்டு நிலைமை திருப்தியற்றிருந்தது.

### 4.1.2 கடன்களின் காலப்பகுப்பாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் படி, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஈட்டு, ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் தோட்டத்துறை ஊழியர் சேமலாப நிதிய கடன்கள், தனிப்பட்ட கடன்கள் மற்றும் மோட்டார் வாகனக் கடன்கள் என்பவற்றின் காலப்பகுப்பாய்வை பின்வரும் கூற்று காட்டுகிறது.

| | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை மீதி | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நிலுவைக் காலம் | ஈட்டுக் கடன்கள் | ஊசேநி கடன்கள் | தோட்டத் துறை ஊசேநி கடன்கள் | தனிப்பட்ட கடன்கள் | வாகனக் கடன்கள் | மொத்தம் |
| மாதங்கள் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 0 | 4,656 | 2,545 | 303 | 649 | 42 | 8,195 |
| 1 - 2 | 2,582 | 1,236 | 46 | 410 | 21 | 4,295 |
| 3 - 5 | 358 | 528 | 252 | 129 | - | 1,267 |
| 6 - 11 | 144 | 637 | 249 | 37 | 1 | 1,068 |
| 12 - 17 | 42 | 3,586 | 312 | 2 | 1 | 3,943 |
| 18 உம் அதற்கு மேலும் | 81 | 60 | 3 | | | 144 |
| மொத்தம் | **7,863** | **8,592** | **1,165** | **1,227** | **65** | **18,912** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊழியர் சேமலாப நிதிய கடன்கள் தொடர்பான ரூபா 8,592 மில்லியன் மொத்த நிலுவையாக இருந்த மீதிகளில், ரூபா 3,646 மில்லியன் அல்லது 42 சதவீதம் ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையில் இருந்தது.

(ஆ) தோட்டத்துறை ஊழியர் சேமலாப நிதிய கடன்கள் தொடர்பான ரூபா 1,165 மில்லியன் தொகையான நிலுவையாக இருந்த மீதிகளில் ரூபா 315 மில்லியன் அல்லது 27 சதவீதம் ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருந்தது.

(இ) இலங்கை மத்திய வங்கியிடமிருந்து நீண்ட காலம் நிலுவையாக இருந்த ஊழியர் சேமலாப நிதியக் கடன்கள் மற்றும் தோட்டத்துறை ஊழியர் சேமலாப நிதியக் கடன்களை அறவிடுவதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததென உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் எதுவும் இருக்கவில்லை.

### 4.1.3 ஈட்டு, ஊழியர் சேமலாப நிதியம், தோட்டத்துறை ஊழியர் சேமலாப நிதியக் கடன்கள் தொடர்பாக கடன் வழங்கல் நிலைமை

கிடைக்கப் பெற்ற தகவல்களின் படி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு 2013 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ஈட்டு, ஊழியர் சேமலாப நிதிய, தோட்டத்துறை ஊழியர் சேமலாப நிதியக் கடன்கள் என்பவற்றின் நிலைமை கீழே தரப்படுகின்றன.

| | 2013 | | 2012 | | முரண் | |
|---|---|---|---|---|---|---|
| | கணக்குகளின் எண்ணிக்கை | பெறுமதி | கணக்குகளின் எண்ணிக்கை | பெறுமதி | பெறுமதி | சதவீதம் |
| | | ரூபா மில் | | ரூபா மில் | ரூபா மில் | % |
| ஈட்டுக் கடன்கள் | | | | | | |
| ஊழியர் சேமலாப நிதியக் கடன்கள் | 6,011 | 2,140 | 4,276 | 1,478 | 662 | 44.79 |
| தோட்டத்துறை ஊழியர் சேமலாப நிதியக் கடன்கள் கடன்கள் | 1,537 | 157 | 1,236 | 165 | (8) | (4.85) |
| தனிப்பட்ட கடன்கள் | 1,599 | 747 | 1,036 | 642 | 105 | 16.36 |
| மோட்டார் வாகனக் கடன்கள் | 9 | 27 | 25 | 53 | (26) | (49.06) |
| **மொத்தம்** | **10,486** | **4,289** | **8,986** | **4,147** | **142** | **3.42** |

மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதியக் கடன்களை முன்னைய ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 1,478 மில்லியன் தொகையான கடன்களுடன் ஒப்பிடும் போது ரூபா 2,140 மில்லியன் தொகையானமையால் ரூபா 662 மில்லியன் அல்லது 44 சதவீத அதிகரிப்பை சுட்டிக் காட்டுகின்றது. மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட ஈட்டுக் கடன்கள் ரூபா 1,218 மில்லியன் தொகையானமையால் ரூபா 591 மில்லியன் அல்லது 32 சதவீத வீழ்ச்சியைக் காட்டுகின்றது. மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட மோட்டார் கடன்கள் ரூபா 27 மில்லியன் தொகையானமையால் ரூபா 26 மில்லியன் அல்லது 49 சதவீத வீழ்ச்சியைக் காட்டுகின்றது. வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை 17 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட கடன்களின் மொத்தப் பெறுமதி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 3 சதவீதத்தால் மாத்திரம் அதிகரித்திருந்தது.

## 4.2 செயற்பாட்டு திறமையீனங்கள்

### 4.2.1 ஈட்டுக் கடன்கள்

ஈட்டுக் கடன்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு மாதிரிச் செவ்வையின் படி, பின்வரும் பிரதான நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சில ஈடுவைக்கப்பட்ட ஆதனங்களின் சந்தைப் பெறுமதி நிலுவையாகவுள்ள தொகையை விட குறைவாக இருந்தது. பின்வரும் கடன்களை உதாரணமாக குறிப்பிட முடியும்.

| கடன் இலக்கம் | வழங்கப்பட்ட திகதி | கடன் தொகை | நிலுவையாக இருந்த முதல் மீதி | மொத்த நிலுவை | பிணை முறியின் சந்தைப் பெறுமதி |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 01/503/1/634, 1/500/1/1259, 1/501/1/1327 | 2011.04.25 | 5,200,000 | 5,108,693 | 8,510,165 | 7,000,000 |

(ஆ) வாடிக்கையாளர்களின் கடன் திருப்பிச் செலுத்தல் இயலுமையை உறுதிப்படுத்தாமல் அத்தகைய வாடிக்கையாளர்களிற்கு கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. அத்தகைய சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| கடன் இலக்கம் | வழங்கப்பட்ட திகதி | கடன் தொகை | நிலுவையாக இருந்த முதல் மீதி | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| 01/503/01/231/PO1/070-2013 | 2007.09.19 | 900,000 | 705,586 | 1,498,898 |

(இ) முன்னைய கடன்களின் நிலுவைகளின் வரலாற்று நிலைமைகளை கருத்திற்கொள்ளாமல் கடன்கள் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அத்தகைய சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| கடன் இலக்கம் | வழங்கப்பட்ட திகதி | கடன் தொகை | நிலுவையாக இருந்த முதல் மீதி | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| 1/500/1/1327 | 2010/07/12 | 700,000 | 690,916 | 1,075,238 |
| 1/500/1/1259 | 2010/02/08 | 3,000,000 | 2,974,711 | 5,082,641 |
| 18/1613 | 2008/04/24 | 750,000 | 27,840 | 170,233 |

(ஈ) சில சந்தர்ப்பங்களில் ஈடுவைக்கப்பட்ட பிணை பெறுமதி 65 சதவீதத்தை விஞ்சிய கடன்கள் வழங்கப்பட்டிருந்தது. சில உதாரணங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கடன் இலக்கம் | வழங்கப்பட்ட திகதி | கடன் தொகை | பிணைமுறியின் பெறுமதி | பிணைமுறியின் சதவீதமாக கடன்கள் |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | % |
| 1/500/1/1327 | 2010/07/12 | 5,157,854 | 7,000,000 | 73.68 |
| 1/500/1/1259 | 2010/02/08 | 4,465,779 | 6,600,000 | 67.66 |

(உ) எதிர்காலத்தில் குறித்த வருமானம் கருத்திற்கொள்வதன் மூலம் கடன்கள் வழங்கப்பட்ட பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன

| கடன் இலக்கம் | வழங்கப்பட்ட திகதி | கடன் தொகை | நிலுவையாக இருந்த முதல் மீதி | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| 09/646/09/0017 | 2013.05.25 | 1,500,000 | 1,194,204 | 1,360,436 |

(ஊ) கடன் கையேட்டின் படி முறையான ஆவனச் சான்றுகளைச் சேகரிக்காமல் கடன்கள் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| கடன் இலக்கம் | வழங்கப்பட்ட திகதி | கடன் தொகை | நிலுவையாக இருந்த முதல் மீதி | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| 09/646/09/0017 | 2013.05.25 | 1,500,000 | 1,194,204 | 1,360,436 |
| 01/503/01/231/POL /070-2013 | 2007.09.19 | 900,000 | 705,586 | 1,498,898 |
| 01/646/01/00012 | 2012.08.25 | 1,700,000 | 1,593,748 | 2,119,894 |

(எ) கடன் கையேட்டின் 26.2 ஆம் பந்தியிற்கு அமைய நிலையான கட்டளைகள் ஊடாக சம்பளங்களிலிருந்து கடன் தவணைப்பணங்களை சேகரிப்பதற்கு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| கடன் இலக்கம் | வழங்கப்பட்ட திகதி | கடன் தொகை | நிலுவையாக இருந்த முதல் மீதி | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| GP/02/04163 | 2011.01.25 | 468,000 | 454,470 | 783,573 |
| GP/02/3834/X2/479 | 2007.02.22 | 450,000 | 436,936 | 632,746 |
| GP/02/04123 | 2008.04.01 | 410,000 | 292,873 | 394,592 |
| 1/503/1/634,1/500/1/1259, 1/501/1/327 | 2008.01.08 | 5,200,000 | 5,108,693 | 8,510,165 |

(ஏ) ஈட்டுக் கடன்களிற்காக உடமையாக்கப்பட்ட அதிகமான ஆதனங்களின் பெறுமதி உரிய கடன்களின் நிலுவை மீதிகளை மேவுவதற்கு போதியதாக இருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| கடன் இல | நிலுவையாக இருந்த முதல் மீதி | ஆதனத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதி | கிடைத்த தொங்கல் தொகை/ சேமிப்பு மீதிகள் | மொத்தத் தொகை | உருவாக்கப்பட்ட நட்டம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| K/16/0681/KY1/559 | 60,000 | 150,000 | 25,401 | 345,485 | 170,084 |
| 7/62516/D7/435 | 150,000 | 350,000 | | 555,862 | 205,862 |
| 10/54419/D10/213 | 99,455 | 375,000 | | 547,799 | 172,799 |
| 12/63400/D12/253 | 42,914 | 75,000 | | 191,047 | 116,047 |
| 6/31940/T6/869 | 262,500 | 850,000 | | 1,098,018 | 248,018 |
| K/4/3186/KY3/289 | 138,409 | 290,000 | | 415,325 | 125,325 |
| GP/2/1758/K2/427 | 252,659 | 600,000 | | 675,433 | 75,433 |
| 18/58484/Y18/129 | 123,745 | 500,000 | | 568,633 | 68,633 |
| KI/001/02/0061/KIA/26 | 8,919,111 | 13,000,000 | | 19,677,458 | 6,677,458 |
| 18/72939/Y18/923-18/62822-18/66598 | 50,834 | 200,000 | | 226,985 | 26,985 |
| 18/62583/Y18/383 | 176,248 | 390,000 | | 710,640 | 320,640 |
| 12/61050/D12/210 | 132,841 | 275,000 | | 500,879 | 225,879 |
| K/4/2929/KY2/813 | 175,000 | 275,000 | | 598,404 | 323,404 |
| 1/32533/CD2/358 | 79,999 | 260,000 | | 306,489 | 46,489 |
| K/16/1144/KY2/529 | 47,272 | 80,000 | 43,000 | 162,742 | 39,742 |
| 6/45094/F6/137 | 299,997 | 225,000 | | 719,201 | 494,201 |
| 6/43545/H6/524 | 255,030 | 450,000 | | 551,886 | 101,886 |
| 10/53468/D10/191 | 118,275 | 550,000 | | 575,640 | 25,640 |
| 2/463/PO1/147 | 1,802,789 | 2,500,000 | | 3,125,622 | 625,622 |
| **மொத்தம்** | **13,187,078** | **21,395,000** | **68,401** | **31,553,548** | **10,090,147** |

## 4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

கம்பஹா கிளையின் அலுவலக வாடகைக்காக கைச்சாத்திடப்பட்ட குத்தகை உடன்படிக்கையின் (5)(ii) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளிற்கு முரணாக, வங்கியானது நகர சபைக்கு மதிப்பீட்டு வரி மற்றும் இறைகளாக ரூபா 44,444 தொகை செலுத்தியிருந்தது.

## 4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தலைவருக்கு வழங்கப்பட்ட கடன் அட்டையால் செய்யப்பட்ட பொழுதுபோக்கு செலவினங்களை மீளளிப்பதற்கு பணிப்பாளர் சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதன்படி, மீளாய்வாண்டின் போது வங்கியால் ரூபா 423,235 கூட்டு மொத்தத் தொகையான பற்றுச்சீட்டுக்கள் மீளளிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. மேலும், கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் பற்றுச்சீட்டுக்கள் அல்லது விலைப்பட்டியல்களால் ஆதாரப்படுத்தப்பட்டிருக்கவில்லை என மேலும் அவதானிக்கப்பட்டது. எனவே, இந்தச் செலவினம் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

(ஆ) 1999 ஒக்தோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக, ஒரு உத்தியோகத்தருக்கு இரண்டு உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது.

(இ) பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் இல்லாமல் வங்கி அதன் ஊழியர்கள் சார்பில் வங்கியால் ஊழியர்களின் சம்பளங்களில் ரூபா 10,274,113 தொகையான உழைக்கும் போது செலுத்தும் வரி செலுத்தப்பட்டிருந்தது.

## 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

கணக்காய்வில் பின்வரும் இனங்காணப்பட்ட நட்டங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவலின் படி, உடமையாக்கப்பட்ட சொத்துக்களின் விற்பனையில் பின்வரும் நட்டங்கள் ஏற்பட்டிருந்தன.

| கோவை பெயர் | கடன் தொகை | மொத்த நிலுவை | தீர்ப்பனவு செய்யப்பட்ட தொகை | நட்டம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 6/35405/P6/269 | 250,000 | 689,167 | 530,000 | 159,167 |
| GL/9/226/GA1/162 | 175,000 | 486,481 | 300,000 | 186,481 |
| 2/65084/E2/208 | 250,000 | 776,191 | 691,279 | 84,912 |
| 18/73127/Y18/972 | 150,000 | 479,341 | 325,000 | 154,341 |
| 19/73724/Y19/045 | 780,000 | 2,329,302 | 2,327,857 | 1,445 |
| 10/58681/D10/277 | 300,000 | 1,428,776 | 750,000 | 678,776 |
| 18/71974/Y18/929 | 190,000 | 640,099 | 530,000 | 110,099 |
| 16/2810/KY2/754 | 175,000 | 389,117 | 250,000 | 139,117 |
| **மொத்தம்** | **2,270,000** | **7,218,474** | **5,704,136** | **1,514,338** |

(ஆ) கிடைக்கப்பெற்ற தகவலின் படி, மீளாய்வாண்டின் போது ரூபா 401,053 தொகையான கடன் வட்டி மற்றும் ரூபா 1,685,144 தொகையான வேறு கட்டணங்கள் பதிவழிக்கப்பட்டிருந்தன.

### 4.6 மனிதவள முகாமைத்துவம்

கிடைக்கப்பெற்ற தகவலின் படி, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரித்த பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் நிலவிய வெற்றிடங்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| பதவியணி வகுதி | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| நிறைவேற்றுனர் | 170 | 173 | (3) மிகை |
| நிறைவேற்றுனர் அல்லாதோர் | 233 | 98 | 135 |
| முகாமைத்துவ பயிற்சியாளர்கள் | 15 | - | 15 |
| சிற்றூழியர் | 66 | 62 | 4 |
| அமைய | - | - | - |
| **மொத்தம்** | **484** | **333** | **151** |

மீளாய்வாண்டின் இறுதியளவில் நிறைவேற்று தரமல்லாதோரின் அங்கீகரித்த பதவியணியின் 58 சதவீதம் வெற்றிடமாக இருந்தமை வங்கியன் சுமூகமாக செயற்பாடுகளை பாதகமாக பாதித்திருந்தது என அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களி தகைமையும் நல்ல ஆளுகையும்

### 5.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

2013 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பின்வரும் இலக்குகள் எய்தப்பட்டிருக்கவில்லை.

| செயல் குறியீடு | இலக்கு | எய்தல்களின் நிலைமை |
|---|---|---|
| நோக்கு 1 | 2013 இல் ரூபா 25 பில்லியனிற்கு கடன் அதிகரிப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் ரூபா 21.37 பில்லியன் மாத்திரமே இருந்தது. |
| | ஒரு மாதத்திற்கு ஆகக் குறைந்த வைப்புக்கள் ரூபா 850 மில்லியன் தேறிய அதிகரிப்பை அடைதல் | ஒரு மாத்தின் வைப்புக்களின் தேறிய அதிகரிப்பு ரூபா 330 மில்லியன் அல்லது 39 சதவீதம் மாத்திரமேயாகும். |
| | அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி சேவை நிலையங்கள் தாபித்தல் | 2013 இல் எந்தவொரு சேவை நிலையங்களும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |
| நோக்கு 2 | 2013 இறுதியளவில் முழுமையாக செயற்படும் கிளைகளை நோக்கி சகல இருக்கின்ற விரிவாக்கல் அலுவலகங்களை இணைத்தல் | 2013 இல் அத்தகைய கிளை ஒன்றிற்கு எந்தவொரு கிளையையும் இணைக்கவில்லை. |
| | மாதிரி கிளைகள் திறத்தல்/ இருக்கின்ற கிளைகளை தரமுயர்த்தல் | எந்தவெரு கிளையும் திறக்கப்பட்டோ அல்லது தரமுயர்த்தப்பட்டோ இருக்கவில்லை. |
| | சிறந்த தரக் கிளைகளாக இருக்கின்ற 4 கிளைகளை தரமுயர்த்தல் | எந்தவெரு கிளையும சிறந்த தரக் கிளையாக தரமுயர்த்தப்பட்டு இருக்கவில்லை. |
| | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பவற்றில் முதலீடு | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பவற்றில் எவ்வித முதலீடும் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| நோக்கு 4 | 2013 அளவில் வருமானத்திற்கு | விகிதம் 24.97 சதவீதத்திற்கு |

| | | |
|---|---|---|
| | விகிதத்திற்கு கிரயத்தை 25 சதவீதத்திலிருந்து 20 சதவீத்திற்கு முன்னேற்றுதல். | குறைவடைந்திருந்தது. |
| நோக்கு 5 | 2013 அளவில் 1-2 மாத நிலுவைகள் 28 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு ஈட்டுக்கடன் வெளிப்டுத்தலை குறைத்தல் | வெளிப்படுத்தல் 32.84 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது. |
| | தனிப்பட்ட மற்றும் வாகனக் கடன்களில் பூச்சிய செயற்பாடற்ற கடன் விகிதங்கள் மற்றும் நிலுவையல்லா நிலை என்பவற்றை பேணுதல். | தனிப்பட்ட மற்றும் வாகனக் கடன்களில் செயற்பாடற்ற கடன் விகிதங்கள் முறையே 18.62 வீதம் மற்றும் 4.26 வீதமாக இருந்தன. |
| | 2013 அளவில் மூன்று கடன் தவணைப்பணத்திற்கு அதிகமான நிலுவைகள் 6 சதவீதத்திலிருந்து 3 சதவீதத்திற்கு ஈட்டுக்கடன் வெளிப்டுத்தலை குறைத்தல் | வெளிப்படுத்தல் 7.95 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது. |
| நோக்கு 6 | தற்போதைய வீடமைப்புக் கடன் வெளிப்படுத்தலான 90 சதவீதத்திலிருந்து 85 சதவீதத்திற்கு குறைத்தல் | வீடமைப்புக் கடன் வெளிப்படுத்தல் 90 சதவீதமாக இருந்தது. |
| | வீடமைப்புக் கடன்கள் (ஈட்டு மற்றும் ஊ,சே.நி) ரூபா 5.5 பில்லியனால் அதிகரித்தல். | வீடமைப்புக் கடன்கள் ரூபா 2 பில்லியனால் மாத்திரம் அதிகரித்திருந்தது. |
| | தனிப்பட்ட கடன்கள் ரூபா 1 பில்லியனால் அதிகரித்தல். | தனிப்பட்ட கடன்கள் ரூபா 617 மில்லியனால் மாத்திரம் அதிகரித்திருந்தது. |
| | வாகனக் கடன்கள் ரூபா 500 மில்லியனால் அதிகரித்தல். | வாகனக் கடன்கள் ரூபா 18 மில்லியனால் மாத்திரம் அதிகரித்திருந்தது. |
| நோக்கு 7 | புதிய துணை வங்கியியல் தீர்வொன்றுடன் சகல கிளை வலையமைப்பை ஒன்றிணைத்தல் | 2013 இல் எந்தவொரு புதிய துணை வங்கியியல் தீர்வும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| | சகல கிளைகளிற்காகவும் ஏரீஎம் | 2013 ஆம் ஆண்டில் ஏரீஎம் |

| | | |
|---|---|---|
| | வலையமைப்பை அமுலாக்கல் | அலகுகள் புதிதாக அறிமுகப் படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| | இடர் முகாமைத்துவம் மற்றும் இணக்கங்களிற்காக வேண்டப்பட்ட தகவல் தொழில்நுட்ப முறைமை அமுலாக்கல் | இடர் முகாமைத்துவம் மற்றும் இணக்கங்களிற்காக எந்தவொரு தகவல் தொழில்நுட்ப முறைமை அமுலாக்கப்பட்டிருக்கவில்லை |
| நோக்கு 8 | இணையதள அடிப்படை அறிவு பங்கிடல் முறைமையை முன்னேற்றலும் தரமுயர்த்தலும் | முறைமை எதுவும் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கவில்லை |
| நோக்கு 10 | வாடிக்கையாளர் பின்னூட்டல் அளவை கண்டுபிடிப்புகளில் தேசிய செயலமர்வை ஒழுங்கமைத்தல் | அத்தகைய செயலமர்வு எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| நோக்கு 11 | பாதிக்கப்பட்ட குடும்பங்களிற்காக உடன்பட்ட வீடுகளின் எண்ணிக்கையை நிர்மாணிப்பதற்கு செயற்திட்டங்களை பொறுப்பேற்றல். | செயற்திட்ட பிரேரணைகள் எதுவும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. |

## 5.2 கொள்வனவுத் திட்டம்

2013 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை, 2013 ஆம் ஆண்டின் போது செய்யப்பட்ட கொள்வனவின் பெறுமதி ரூபா 54,823,686 ஆக இருந்தது.

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக விரிவான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை, பதிலாக விரிவான வருமானம் மற்றும் செலவினங்களை கருத்திற்கொள்ளாமல் பொழிப்பாக்கப்பட்ட இலாப நட்டக் கணக்கு மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. பூரணத்துவமற்ற பாதீட்டின் படி, குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டன. எனவே, பாதீடானது சிறந்த முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (7) (ஏ) பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கை மூலம் வங்கியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உடமையாக்கப்பட்ட சொத்துக்கள்

(ஆ) கடன் மீதிகளின் நிலுவைகள்

(இ) வட்டி வருமானம் மற்றும் வரிப் பொறுப்புகள் கணக்கிடல்

(ஈ) கட்டுப்பாட்டுக் கணக்குகளின் இணக்கம் செய்தல்.

(உ) முற்பணங்களின் தீர்ப்பனவு

(ஊ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகளின் உறுதிப்படுத்தல்கள்

(எ) கணனிமயப்படுத்தப்பட்ட தகவல் முறைமை

(ஏ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்குதல்

(ஐ) பாதீட்டுக் கட்டுப்பாடு